புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஏப்ரல் (April) 09, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 15 • விலை(PRICE) ரூ.6.00



# கோடி கோடியாக சங்கிகளுக்கு குவியும் வெளிநாட்டுநிதி!

வெளிநாடுகளில் இருந்து நிதி உதவி பெற்று செயல்படும் நிறுவனங்களைக் குறிவைத்து ஒழிக்கும் முயற்சிகளில் ஒன்றிய ஆட்சி இறங்கியுள்ளது. இதற்கான *FCRA* சட்டத்தில் திருத்தங்களை செய்யும் மசோதாவை கடந்த மார்ச்-25ம் தேதி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி உள்ளது. குறிப்பாக கிறிஸ்துவ நிறுவனங்களை முற்றாக ஒழித்துக் கட்டும் மசோதா இது என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தேர்தல் பரப்புரையில் சுட்டிக்காட்டி மசோதாவைத் திரும்பபெற வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்.

இந்த மசோதா அமலுக்கு வந்தால் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதி பெறும் உரிமையை ஒன்றிய ஆட்சி ரத்து செய்ய முடியும். உரிமையை ரத்து செய்து விட்டால் வெளிநாடுகளில் இருந்து வரக்கூடிய நிதிக்கு மட்டும் தடையில்லை; மாறாக நிதி உதவியோடு நடத்தப்படும் மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள், சர்ச்சுகள் இவைகளை அரசு தானாகவே கைப்பற்றிக் கொள்ள முடியும். இதில் நீதிமன்றங்கள் தலையிட முடியாது. அடிப்படை உரிமைகளையே முடக்கும் கொடூரமான சட்டம்!


FRONTLINE

Indeed, from nondescript structures that served as both office and residences for pracharaks either stationed or visiting Delhi, the buildings that now meet the visitor's eye are impressive indeed: three 12-storied towers with 5 lakh square feet of space for official and residential purposes housing a mess, multiple auditoriums, a library, a medical facility, a counter for the publications divisions, and, of course, a temple.

If all this was not enough evidence of ample resources, the 4 acre plot also boasts of a 150 kilowatt solar plant and a 140 kilolitres per day sewage treatment plant, besides a parking lot that will eventually accommodate almost 200 cars. Built at a cost of Rs.150 crore–information shared by RSS functionaries with mediapersons even as "preview" video teams were shepherded through the new Keshav Kunj complex in the days preceding the formal inauguration–the renovated complex is testimony to the abundance of resources and the organisation's forthrightness about it.

வேத பார்ப்பனியம் "சூத்திர பஞ்சமர்களின்" கல்வி உரிமையைத் தடை செய்ததோடு சமஸ்கிருத பள்ளிகளை மட்டுமே நடத்தி வந்தது; இந்தியாவில் பள்ளிக்கல்வி முறையை அறிமுகப்படுத்தியது பிரிட்டிஷ் அதிகாரி மெக்காலே என்ற கிறிஸ்தவர்தான். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக கல்வி நிலையங்களைத் திறந்தது கிறிஸ்தவ நிறுவனங்கள்தான். குறிப்பாக தமிழ்நாட்டில் கிறிஸ்துவ நிறுவனங்கள் நடத்தும் மருத்துவமனைகள் மிகச் சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றன. சங்கிகளுக்கு இந்த செயல்பாடுகள் எரிச்சல் ஊட்டுகின்றன.

சுனாமி வந்த போதும் கொரோனா காலத்திலும் ஜெயலலிதா "ஆசியால்" சென்னை நகரம் வெள்ளத்தில் மூழ்கிய போதும் ஓடோடி வந்து மக்களுக்கு உதவிக்கரம் நீட்டியது கிறிஸ்தவ, இஸ்லாமிய தொண்டு நிறுவனங்கள் தான். மோடி ஆட்சியில் ஏற்கனவே பல கிறிஸ்தவ தொண்டு நிறுவனங்களுக்கு வெளிநாட்டு நிதி நிறுத்தப்பட்டதால் பல நிறுவனங்கள் முடங்கி விட்டன. அதே நேரத்தில் ஆர்.எஸ்.எஸ் ஆதரவு பெற்ற பல நிறுவனங்களுக்கு அயல்நாடுகளில் இருந்து நிதி குவிந்து வருகிறது. இதற்கு எந்தத் தடையும் இல்லை.

ஆர்.எஸ்.எஸ் தன்னை முன்னிறுத்திக் கொள்ளாமல் தனது துணை அமைப்புகளான இந்து சுயம்சேவக்; விசுவ இந்து பரிஷத்; சேவா இன்டர்நேஷனல் போன்ற அமைப்புகள் வழியாக வெளிநாடுகளில் இருந்து கோடிக்கணக்கில் நிதி பெற்று வருகிறது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற பல நாடுகளில் இந்த அமைப்புகளின் கிளைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த அமைப்புகள் வழியாக ஆர்.எஸ்.எஸ் துணை அமைப்புகளான ஏகல் வித்யாலயா பவுண்டேஷன்; வனவாசி கல்யாண் ஆஷ்ரம்; சேவாபாரதி போன்ற அமைப்புகள் இந்த நிதியைப் பெற்று வருகின்றன.

மருத்துவ சேவை; கல்வித் தொண்டு; நிவாரண உதவிகள் என்ற பெயரில் இந்த நிதி வசூலிக்கப்படுகிறது. ஆனால் இந்த சேவைகள் எதுவும் செய்யாமல் ஆர்.எஸ்.எஸ் கொள்கைகளை பரப்பவும் சாகாக்களை நடத்தவும், இந்துத்துவ அரசியலைப் பரப்பவுமே இந்த நிதி பயன்படுத்தப்பட்டு வருகிறது .

**இதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கலாம்; ஆதாரங்களையும் கூறுகிறோம்.**

- இங்கிலாந்தில் சேவை கண்காணிப்பு ஆணையம் என்ற ஒரு அமைப்பு இயங்குகிறது (charity commision scrutiny) இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆர்.எஸ்.எஸ் துணை அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதி நன்கொடைகள் மக்கள் சேவைக்கு பயன்படுத்தாமல் ஆர்.எஸ்.எஸ் கொள்கைகளைப் பரப்புவதற்கு பயன்படுத்தப்படுகிறது என்று குறிப்பிடுகிறது.

- இங்கிலாந்தில் இருந்து மட்டும் ஆர்.எஸ்.எஸ் துணை அமைப்புகளுக்கு 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமா? அதிர்ச்சி அடையாதீர்கள்! 47.2மில்லியன் டாலர்! செலவிட்டது 28.1 மில்லியன் டாலர். கையில் முடக்கி வைத்திருப்பது 19.1 மில்லியன் டாலர் (178 கோடி ரூபாய்).

இந்த வரவுக் செலவு கணக்கு பெரும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியது காரணம் அது கோவிட் தொற்று நோயால் மக்கள் அவதியுற்ற ஆண்டு. அவர்களுக்கு உதவி செய்வதாகக் கூறி பெறப்பட்ட தொகை இது! மரணத்துடன் மக்கள் போராடிக் கொண்டிருந்த அந்த காலகட்டத்தில் கூட பெறப்பட்ட தொகையை முழுமையாக செலவிடாமல் 19.1 மில்லியன் டாலரை பதுக்கிக் கொண்டிருக்கிறார்கள். கொரோனா காலத்தில் ஆர்.எஸ்.எஸ் களம் இறங்கி செயல்பட்டதாக எந்த செய்தியும் கிடையாது. இங்கிலாந்தின் சேவை கண்காணிப்பு ஆணையம் இது குறித்து தனது சந்தேகங்களை பதிவு செய்திருக்கிறது.

ஆண்டுதோறும் ஆர்.எஸ்.எஸ் துணை அமைப்புகள் பெற்று வரும் நிதி பற்றிய விவரங்கள் இந்திய வருவாய்த்துறை பதிவேடுகளில் காணக் கிடக்கின்றன கோடிக்கணக்கில் வெளிநாட்டு நிதிகள் குவிவது சான்றுகளோடு பதியப்பட்டுள்ளது.ஆர்.எஸ்.எஸ் நூற்றாண்டு விழாவை ஒட்டி தனது தலைமை அலுவலகத்தை நாக்பூரில் இருந்து டெல்லிக்கு மாற்றியது ; இதன் திறப்பு விழா ( பிரவேஷ்உத்சவ்)2025 பிப்ரவரி 19ஆம் தேதி நடந்தது.

- ஆர்.எஸ்.எஸ்-காரர்கள் மிகவும் எளிமையானவர்கள் என்ற பிம்பத்தை இந்த நிகழ்ச்சி தகர்த்து எறிந்தது.

- 5 லட்சம் சதுர அடியில் 12 அடுக்குகளை கொண்ட 3 மாளிகைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

- ஆர்.எஸ்.எஸ்-காரர்களுக்கு வீடுகள்; வெளியூர்களில் இருந்து வருவோருக்கு தங்கும் விடுதிகள்; மருத்துவமனை; உணவு விடுதிகள்; கூட்ட அரங்குகள்; என்று கார்ப்பரேட் அலுவலகங்கள் போல் இந்த மாளிகைகள் எழுப்பப்பட்டுள்ளன இதற்கான செலவு ரூ150 கோடி என்று ஆர்.எஸ்.எஸ் பொறுப்பாளர்கள் செய்தியாளர்களிடம் கூறினர்.

இந்த நிகழ்வில் ஆர்.எஸ்.எஸ் தலைவர்களோடு அமித்ஷா, ராஜ்நாத் சிங் மற்றும் ஜே பி நட்டா பங்கேற்றுள்ளனர். இதற்குப் பின்னால் அதிர்ச்சிகரமான ஒரு செய்தி இருக்கிறது. இந்த மாளிகையை கட்டி எழுப்பியுள்ள ஆர்.எஸ்.எஸ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்ல; எந்த ஒரு சட்டத்தின் கீழும் கடந்த 100 ஆண்டுகளாக இந்த அமைப்பு தன்னைப் பதிவு செய்து கொள்ளாமலே செயல்பட்டு வருகிறது.

பதிவு செய்யப்படாத ஒரு அமைப்புக்கு எப்படி நிலம் வழங்கப்பட்டது? எப்படி கட்டிட அனுமதி தரப்பட்டது? இதற்கெல்லாம் விடையே கிடையாது! ஆனால் இந்துத்துவா எனும் மதவெறுப்புக் கண்ணோட்டத்தில் பதிவு செய்யப்பட்டு மக்கள் பணியாற்றும் கிறிஸ்துவ நிறுவனங்களின் பதிவுகளை ரத்து செய்யவும் உடைமைகளை பறிமுதல் செய்யவும் துடிக்கிறார்கள். இந்த மதவெறி சக்திகள் தான் அஇஅதிமுகவின் முகமூடியில் பதுங்கிக் கொண்டு தமிழ்நாட்டில் காலூன்றத் துடிக்கின்றன.

## 10 ஆண்டுகளில் மோடி ஆட்சியில் மூடப்பட்ட பள்ளிகள் 89400!

இந்தியாவில் கடந்த பத்து ஆண்டுகளில் 89400 க்கும் மேற்பட்ட பள்ளிகளை மூடியுள்ளனர். இதில் 60 விழுக்காடு டபுள் இன்ஜின் சர்க்கார் என்று சொல்லப்படுகிற பாஜக ஆளும் மாநிலங்களில் தான்.

மத்தியிலும் நாங்கள் தான் மாநிலத்திலும் நாங்கள் தான் என்று கூப்பாடு போடுகிறவர்கள் ஆட்சியிலே பள்ளிகளை மூடி வருகின்றனர். இதே வேளையில் விஸ்வகர்மா திட்டத்தின் மூலம் 2,72,000 விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

PM SVANidhi சாலையோர வியாபாரிகளுக்கான கடன் உதவித் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் 2 கோடி குழந்தைகள் பள்ளி கல்வி கட்டமைப்பில் இருந்து தங்களை விடுவித்துள்ளனர். ஆக கல்வி கட்டமைப்பை சீர்குலைத்து மீண்டும் இளைஞர்களை குழந்தைகளை, பெண்களை உடல் உழைப்பு சந்தைக்கு தள்ளுகிற வேலையை ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து செய்து வருகிறது.

பள்ளிகள் ஏன் மூடப்படுகின்றன என்று கேள்விகள் கேட்டால் குறைவான குழந்தைகளே படிக்க வருகிறார்கள் என்று காரணத்தைச் சொல்கிறார்கள். நாங்கள் பள்ளிகளை மூடவில்லை மற்ற பள்ளிகள் உடன் இணைக்கின்றோம் என்று பதிலளிக்கிறார்கள்.

## வேதமத மரபு திணிப்புகளை முறியடிக்க தமிழ்நாடு அரசின் திட்டங்கள்

திமுக தேர்தல் அறிக்கையில் சமூக நீதி மற்றும் தமிழ் மொழி காத்தல் என்ற இரண்டு தலைப்புகளில் வெளிவந்த கருத்துக்களை சுட்டிக்காட்ட வேண்டும். "சமூக நீதி என்பது உயர்ந்தவர்களை கீழே இறக்கி விடுவது அல்ல; மாறாக பள்ளத்தை சமப்படுத்தி மேடாக்குவது தான்" என்ற பெரியார் விளக்கத்தோடு துவங்குகிறது தேர்தல் அறிக்கை. இரண்டு முக்கிய அம்சங்கள் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

ஜாதி வாரி கணக்கெடுப்பின் தரவுகள் அடிப்படையில் உரிய பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும். தனியார் நிறுவனங்களில் ஆண்டுக்கு ரூ.20 இலட்சத்துக்கு மேல் ஊதியம் பெறும் உயர் பதவிகளில், ஆதிதிராவிடர்; பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோரை அமர்த்துவதற்கான திட்டமொன்றை தேர்தல் அறிக்கை முன்வைத்திருக்கிறது.




அதாவது இப்படி வாய்ப்பு அளிக்கும் தனியார் நிறுவனங்களுக்கு சலுகைகளாக அரசே மானியங்களாகமுதலீடு செய்வதோடு ,வேறு பல சலுகைகளையும் வழங்கும் என்று தேர்தல் அறிக்கை கூறுகிறது. தனியார் நிறுவனங்களின் உயர் அதிகார மையங்கள் விளிம்பு நிலை மக்களுக்கு தொடர்ந்து மறுக்கப்படுகின்றன; இதை மாற்றி அமைக்க திராவிட மாடல் ஆட்சி முன் வைத்துள்ள திட்டம் இது. இப்படி ஒரு திட்டத்தை சிந்தனையை வேறு எந்த மாநிலத்திலாவது பார்க்க முடியுமா? தமிழ் வளர்ச்சி எனும் தலைப்பில் இடம் பெற்றுள்ள கருத்துகளும் மிகவும் முக்கியத்துவம் பெற்றவை.

"பாரதிய பாஷா பரிவார்" என்ற அமைப்பை உருவாக்கியுள்ள ஒன்றிய ஆட்சி; இந்தியாவின் அனைத்து மொழிகளுக்கும் தாய் மொழி சமஸ்கிருதம் தான் என்று நிறுவ முயல்வதை அறிக்கை சுட்டிக்காட்டி எச்சரிக்கிறது.

இதை முறியடித்து திராவிட மொழிகளின் தனித்துவத்தையும் பண்பாட்டுக் கூறுகளையும் காப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் தொடர்ந்து ஈடுபடும் என்ற உறுதியை இந்த அறிக்கை தருகிறது. அதற்காக அரசு மேற்கொள்ள இருக்கும் விரிவான திட்டங்களை அறிக்கை பட்டியலிட்டுள்ளது.

தொடர்ச்சி 2-ம் பக்கத்தில்..

# தேர்தல் களத்தில் பார்ப்பனர்கள்!

1967-ல் ஆட்சிக்கு வந்த அண்ணா அமைத்த அமைச்சரவையில் ஒரு பார்ப்பனர் கூட இடம்பெறவில்லை. பார்ப்பனர் அல்லாத அமைச்சரவை என்று பெரியார் பாராட்டினார். இப்போது களத்தில் நிற்கும் திமுகவும் அதிமுகவும் ஒரு பார்ப்பன வேட்பாளரைக் கூட நிறுத்தவில்லை. காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலிலும் பார்ப்பனர் இல்லை.

விஜய் கட்சியான தவெகவில் 2 பார்ப்பனர்கள். பார்ப்பனக் கோடாரிக்காம்பு சீமான் கட்சியில் மட்டும் 6 பார்ப்பனர்கள் நாம் தமிழர்களாக களம் இறக்கப்பட்டுள்ளனர். இரண்டு கட்சிகளும் பார்ப்பனர்கள் நிறைந்த பகுதிகளான ஸ்ரீரங்கம், மயிலாப்பூர் தொகுதிகளில் பார்ப்பன வேட்பாளர்களை நிறுத்தியுள்ளனர். தமிழ்நாடு பிராமணர் சங்கம் பாஜகவுக்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளது. ஆனாலும் பாஜக வேட்பாளர் பட்டியலிலும் பார்ப்பனர்கள் இடம்பெறவில்லை.

பார்ப்பனர்களை அமைச்சரவையில் சேர்த்தவர் எம்.ஜி.ஆர்தான். 1980,1986 ஆண்டுகளில் எச்.வி ஹண்டேவை மருத்துவத்துறை அமைச்சராக்கினார் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா இரா.ராமநாதன் என்ற உச்சிக்குடுமி அடையாளத்துடன் வலம் வந்தவரை குடந்தை தொகுதியில் வேட்பாளராக்கினார். அவர் தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினரானார். 2016-ல் ஜெயலலிதா நடராஜ் என்ற ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரியை வேட்பாளராக்கினார். மயிலாப்பூர் தொகுதியில் அவர் வெற்றி பெற்றார். 2002, 2007,2013 ஆண்டுகளில் மைத்ரேயன் என்ற பார்ப்பனர் அதிமுகவின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். இவர் பாஜகவில் இருந்து அஇஅதிமுகவில் சேர்ந்தவர். இப்போது திமுகவில் சங்கமம் ஆகி உள்ளார். அமைச்சரவையை தனது முழு கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஜெயலலிதாவும் பார்ப்பனர்தான். சட்டமன்றத்திலேயே "நான் ஒரு பாப்பாத்திதான்" என்று பெருமையோடு அறிவித்துக் கொண்டவர்.

அண்ணாமலை பாஜக தலைவராக இருந்தபோது பார்ப்பனர்களை முன்னிறுத்தி தமிழ்நாட்டில் கட்சி வளர்க்க முடியாது என்று முடிவு செய்து கே.டி.ராகவன், எச்.ராஜா, எஸ்.வி.சேகர் போன்ற பார்ப்பனர்களை கட்சியிலிருந்து ஓரம் கட்டினார். இப்போது தொலைக்காட்சி விவாதங்களில் சமூக ஆர்வலர் என்ற பெயரில் விவாதிக்கும் ரவீந்திரன் துரைசாமி என்பவர் சீமானின் தீவிர ஆதரவாளர். சீமானையும் ரஜினிகாந்தையும் சந்திக்க வைப்பதில் இவர்தான் இடைத்தரகராக செயல்பட்டார். இப்போது "பிராமணர்களுக்கு" அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று புலம்பியுள்ளார். பார்ப்பனர்கள் வேட்பாளராக இடம்பெறாவிட்டாலும் பார்ப்பனியத்தைக் காப்பாற்றவே பாஜகவும் அஇஅதிமுகவும் துடித்துக் கொண்டிருக்கின்றன என்பதே உண்மை!

# குலுங்க குலுங்க சிரிக்கலாம்!

★ முதல்வர் வேட்பாளராக களத்தில் இறங்கி உள்ள விஜய்க்கு வேட்பு மனுவைக் கூட ஒழுங்காக பூர்த்தி செய்யத் தெரியவில்லை. பெரம்பூரில் அவர் காட்டிய சொத்து மதிப்பு அடுத்த இரண்டு நாளில் திருச்சியில் எகிறி உள்ளது.

★ இணை பொதுச்செயலாளராக உள்ள நிர்மல் குமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே ஓய்வுபெற்ற உள்துறை செயலாளர் பெயருக்கு பாதுகாப்பு கேட்டு கடிதம் எழுதுகிறார்.

★ தேர்தல் பரப்புரைச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா தேவையில்லாமல் நடிகர் ரஜினியை சீண்டி விஜய்க்கு எதிராக ரஜினி ரசிகர்களை தூண்டி விட்டார்.

★ வில்லிவாக்கம் ஆதவ் அர்ஜூனா பரப்புரை கூட்டத்தில் குவாட்டர் பாட்டில் விழுந்தவுடன் உடனே தனது நுண்ணறிவை கொண்டு சிந்தித்து திமுக வீசியது தான் என்றார். வீசிய வரை மேடைக்கு கொண்டு வர வேண்டும் என்று சவால் விட்டார் ஆதவ் அர்ஜூனா. குவாட்டர் பாட்டில் வீசியவர்களை உடனே காவல்துறை பிடித்தது. ஆனால் அவர்கள் இரண்டு பேரும் விஜய் ரசிகர்கள் என்ற உண்மைதான் அம்பலமானது.

★ விஜய் பரப்பரை கூட்டத்தில் குலுங்கி குலுங்கி அழுகும் ஒரு பெண்ணின் படத்தை ஒளிபரப்பினார்கள். ஒரே பெண் இப்படி திட்டமிட்டு அழவைக்கப்படுகிறார் என்றும் அவர் துணை நடிகை என்பதும் அம்பலமானது.

★ வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த தவெக வேட்பாளர் அதிகாரியை சந்தித்தார். தேர்தல் அதிகாரிகள் வேட்பு மனு எங்கே? என்று கேட்டபோது தவெக வேட்பாளர் அச்சச்சோ.. வேட்பு மனுவை வீட்டிலேயே மறந்து விட்டேன் என்று வீட்டுக்கு ஓடினார்.




★ புதுச்சேரியில் விஜய்க்கு பாதுகாப்பாக வரும் பவுன்சர்களுக்கு பாலாபிஷேகம் செய்தனர் அவரது தொண்டர்கள்.

★ புதுச்சேரியில் ஆட்சியில் இருப்பது பாஜக கூட்டணி என்றாலும் விஜய் அங்கேயும் போய் திமுக தீய சக்தி என்று முழங்கினார்.

★ இப்படி அறிவார்ந்த தலைவர்கள், தொண்டர்கள், பொறுப்பாளர்களோடு தமிழ்நாட்டில் சுத்த சுயம் பிரகாச நல்ல சக்தியாக உயர்ந்த சிந்தனையாளர்கள் படையுடன் விஜய் கட்சி களம் இறங்கியுள்ளது.

அனல் பறக்கும் தேர்தல் பிரச்சாரத்தில் தவெக நல்ல பொழுதுபோக்கு கட்சியாகவும், மனம் திறந்து சிரிக்க வைக்கும் கட்சியாகவும் அரசியல் களத்தில் வருவதை மக்கள் மிகவும் ரசித்து வருகிறார்கள்.

*கோடங்குடி மாரிமுத்து.*

# தேர்தல் களத்திலும் மாநில உரிமைகளை மீட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

*இரண்டு மாநில உரிமைகளை மீட்டு தந்திருக்கிறது திராவிட மாடல் ஆட்சி. பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்ட ஆர்.என் ரவியை எதிர்த்து சட்டமன்றத்தில் பல்கலைக்கழகங்கள் தொடர்பாக 9 திருத்தங்களை கொண்டு வந்து நிறைவேற்றினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.*

*இதை எதிர்த்து வெங்கடாசலபதி என்பவர் வழக்கு தொடர்ந்தார். நெல்லை மாவட்ட பாஜக தலைவர் என்ற அடையாளத்தை மறைத்து பொதுநல வழக்கு என்ற முகமூடியோடு வழக்கை தொடர்ந்தார். வழக்கை ஜூன் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக நீதிபதிகள் தெரிவித்தனர். ஆனால் தேர்தலுக்குள் வழக்கை விசாரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்போதே விசாரணையை நடத்த வேண்டும் என்று மனு போட்டார்.தனது வழக்கு வெற்றி பெறும் என்ற நம்பிக்கையில் இதை திமுகவுக்கு எதிரான பிரச்சாரமாக மாற்றுவது அவர்களின் திட்டம். ஆனால் திட்டம் பாஜகவுக்கு எதிராகவே திரும்பி விட்டது; வழக்கை விசாரித்த தலைமை நீதிபதியின் அமர்வு துணைவேந்தர்களை நியமிக்கும் உரிமை மாநில சட்டமன்றத்திற்கே உண்டு என்றும்; ஆளுநரிடமிருந்து அதிகாரங்களை பறித்து தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய சட்ட திருத்தங்கள் செல்லும் என்றும் தீர்ப்பளித்து விட்டது.*

*அதேபோல் சிறை கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் உரிமை மாநில அரசுக்கு உண்டு என்றும்; இதில் ஆளுநர்கள் தலையிட முடியாது என்றும் இரண்டு நாட்களுக்கு முன்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்திருக்கிறது. இரண்டு தீர்ப்புகளும் ஆளுநராக இருந்த ஆர்.என் ரவியின் அடாவடியை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு! இந்தத் தீர்ப்புகள் வரும் நேரத்தில் ஆளுநர் ரவி இங்கே இல்லை; அவர் கல்கத்தா போய்விட்டார். தேர்தலை சந்திப்பதற்கு முன் களத்திலே நின்று கொண்டிருக்கும் முதல்வர் ஸ்டாலின் மாநில உரிமைகளை மீட்டுத் தந்து வெற்றி பெருமிதத்துடன் நிமிர்ந்து நிற்கிறார்.*

*ஆளுநரின் இந்த உரிமை பறிப்புகளை வாய் திறந்து கண்டிக்காதவர் எடப்பாடி பழனிச்சாமி!*

# மகளிர் முன்னேற்றம் ஒன்றிய ஆட்சி பாராட்டுகிறது

*தமிழ்நாட்டில் 2021-இல் ஒரு லட்சத்து 1,26,000 ஆக இருந்த மகளிர் தொழில் முனைவோர் எண்ணிக்கை 2024-25-ல் 9,04,000 ஆக உயர்ந்தது! பி.ஜே.பி ஆளும் குஜராத் மாநிலத்தில் மகளிர் தொழில் முனைவோர் 2,18,000 பேர் மட்டுமே. ராஜஸ்தான் மாநிலத்திலும் 3,36,000 பேர் மட்டுமே! மகளிர் சாதனையில் 'திராவிட மாடல்' ஆட்சியின் பெருமைகள் குன்றின் மேலிட்ட விளக்காய் புகழொளி பரப்புகிறது என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.*

*மனித சமுதாயத்தில் ஏறத்தாழ சரி பாதியாக இருக்கும் மகளிர் சமுதாய முன்னேற்றத்தில் திராவிட இயக்கம் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களுக்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அதனால் இந்தியாவிலேயே அதிகமாக பெண்கள் கல்வி, அறிவியல், பொருளாதாரம், தொழில் முதலிய அனைத்திலும் ஆற்றல்கள் பெற்று பன்முகத் திறன்களுடன் வளர்ந்து இந்திய அளவில் முன்னிலை பெற்றுத் திகழ்கிறார்கள்.*

*ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் கடந்த 2021-2022 ஆம் நிதியாண்டில் 'திராவிட மாடல்' ஆட்சி தொடங்கிய காலகட்டத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தர பெண் தொழில்முனைவோரின் எண்ணிக்கை, 1,26,000 ஆக இருந்தது. அந்த எண்ணிக்கை, கடந்த 5 ஆண்டுகளில் 7 மடங்கு உயர்ந்து, 2024-2025 ஆம் நிதியாண்டில், 9,04,000 ஆக உயர்ந்து மாபெரும் சாதனை படைத்துள்ளது. தமிழ்நாடு என்பது குன்றின் மேலிட்ட விளக்காக புகழொளி பரப்புகிறது!*

*அதே நேரத்தில், பி.ஜே.பி ஆட்சி செய்யும் குஜராத் மாநிலத்துடன் ஒப்பிட்டால் அங்கு சிறு, குறு மற்றும் நடுத்தரப் பெண் தொழில் முனைவோரின் எண்ணிக்கை வெறும் 2,18,000. அதே போல ராஜஸ்தான் மாநிலத்திலும் 'திராவிட மாடல்' ஆட்சியை விடக் குறைந்து, 3,36,000 ஆக உள்ளது.*

முதல் பக்கத் தொடர்ச்சி..

***தமிழ் மொழியின் பல்வேறு வட்டார வழக்குகள், பண்பாடுகள் குறித்த அனைத்து தகவல்களையும் சேகரித்து செயற்கை நுண்ணறிவு அறிவியல் உதவியுடன் களஞ்சியம் ஒன்றை தயாரித்தல்.***

***பல்வேறு துறைகள் குறித்து பன்னாட்டு இதழ்களில் வெளிவரும் கட்டுரைகளை தமிழாக்கம் செய்தல்; அதற்கேற்ற தமிழ் கலைச் சொற்களை உருவாக்குதல்;***

***தமிழ் மொழி மற்றும் தமிழர் பண்பாடுகளை சிறப்பாக காட்சிப்படுத்தும் திரைப்படங்களுக்கு கலைஞர் பெயரில் விருது வழங்குதல்;***

***தமிழ்நாடு மற்றும் தமிழர் தொடர்பான அனைத்து கல்வெட்டுகளையும் சேகரித்து டிஜிட்டல் மயமாக்குதல்; கல்வெட்டுகளின் பெரும் களஞ்சியமாக நூல் தொகுப்பை உருவாக்குதல் என்று பல்வேறு திட்டங்களை முன்வைக்கிறது தேர்தல் அறிக்கை.***

*வேத மத பண்பாடுகளுடன் தமிழையும் தமிழரையும் இணைக்க நடக்கும் அத்தனை சதிகளையும் முறியடிப்பதற்கான திட்டங்களாக இவை முன்வைக்கப்படுகின்றன. இவை அனைத்தும் தமிழ்நாட்டின் எந்த ஒரு கட்சி சார்பான பிரச்சனை அல்ல; மாறாக தமிழ்நாட்டின் ஒருமித்த பிரச்சனை. அதனால்தான் இந்த தேர்தல் ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் நடக்கும் தேர்தல் என்று தமிழ்நாடு முதலமைச்சர் ஒவ்வொரு கூட்டங்களிலும் வலியுறுத்துகிறார். வாக்குரிமையோடு நாட்டுரிமையையும் இணைத்து நடக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் இது!*

*கங்கைச் சமவெளி நாகரிகத்திற்கு பிந்தியதே கீழடி தமிழர் நாகரிக ஆய்வுகள் என்று வரலாற்றைத் திருத்தி காலத்தை மாற்றச் சொல்லி ஒப்புதல் தர மறுக்கிறது ஒன்றிய ஆட்சி. தமிழர் நாகரிகத்தை இருட்டடிக்கும் இந்த துரோகத்தைக் கூட கண்டிக்க எடப்பாடி தயாராக இல்லை. அவர் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும் இதுகுறித்து எந்த கண்டனமும் இல்லை . இது தமிழர்களுக்கு இழைக்கும் மகத்தான துரோகம்அல்லவா?*

***மீட்போம் நாட்டுரிமையை! வீழ்த்துவோம் துரோகிகளை!***

# தேர்தல் களம்; மக்களிடம் கூறுவோம்

## தமிழ்நாட்டு அரசியல் களங்களின் தொகுப்பு:

## எடப்பாடியின் முகத்திரையை கிழித்தார் முதல்வர்!

"எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்" என்ற பழமொழிக்கு ஏற்ப தோல்வி பயத்தில் தொடர்ந்து அவதூறுகளைப் பேசி வருகிறார் எடப்பாடி பழனிச்சாமி. தனது எஜமானர்களின் பாணியில் பொய்களை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார். சங்கிகளும் தம்பிகளும் பேசும் அதே பாணியில் தற்போது அதிமுகவும் பேசுகிறது. உண்மைக்கு மாறான பொய் தகவல்களை கூச்ச நாச்சமின்றி பொதுவெளியில் பேசி வருகிறார் எடப்பாடி பழனிச்சாமி. அவர் பேசிய பொய் பட்டியல்:

● 2002 ஆம் ஆண்டு டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்கள் பிரதமராவதற்கு ஆதரவாக அதிமுக வாக்களித்தது. ஆனால் சிறுபான்மை மக்களுக்கு ஆதரவு கொடுப்போம் என்று சொல்லும் திமுக இஸ்லாமியரான அப்துல் கலாம் அவர்களுக்கு எதிராக வாக்களித்தது என்று கூறினார்.

ஆனால் உண்மை நிலவரம் என்னவென்றால் 2002 குடியரசு தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்ட போதிலும் தேசிய ஜனநாயக கூட்டணியில் கலைஞர் அங்கம் வகித்தார். திமுக உட்பட காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சிகள் அப்துல் கலாம் அவர்களை ஆதரித்தது. குடியரசுத் தலைவராக அப்துல் கலாம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கலைஞர் அவருக்கு கவிதை ஒன்றை எழுதினார். அந்தக் கவிதை அப்போது பேசு பொருளானது. அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அப்துல் கலாம் கடிதமும் எழுதியுள்ளார்.

● காமராசர் மேல் பாச மழையை பொழிந்து வரும் எடப்பாடி 10ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த போது எந்த ஒரு திட்டமும் செய்யவில்லை. பெருந்தலைவர் காமராசர் மறைந்த போது அவரின் உடலை அடக்கம் செய்வதற்கு மெரினாவில் இடம் தரவில்லை திமுக என்று தனது எஜமானர்களின் பாணியில் புளுகு மூட்டையை அவிழ்த்து விடுகிறார்.

ஆனால் உண்மை என்ன தெரியுமா? 1975 அக்டோபர் 2 காமராசர் மறைந்த போது அவரின் உடலை பொதுமக்கள் அஞ்சலிக்காக சென்னை ராஜாஜி அரங்கத்தில் வைத்து உரிய மரியாதையை செய்தது திமுக. அரசு மரியாதையுடன் தகனம் செய்ய ஏற்பாடு செய்தவர் கலைஞர். மேலும் காமராசர் உடல் புதைக்கப்படவில்லை. அவருக்கு வாரிசுகள் இல்லை என்பதால் அவரின் தங்கை வழி பேரன் தான் அவருக்கு இறுதி சடங்குகளை செய்தார். அவரின் உறவினர் சமீபத்திய பேட்டியில் காங்கிரஸ்காரர்கள் யாரும் மெரினாவில் அடக்கம் செய்வதற்கு கேட்கவில்லை என்றும் கலைஞர் பெருந்தன்மையுடன் காமராசர் உடலை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்தார் என்றும் நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.




கிண்டியிலே காந்தி மண்டபத்திற்கு அருகிலே காமராசருக்கு நினைவிடம் அமைக்கப்பட்டது. காமராசர் நினைவிடம் யாரும் கவனிக்கப்படாத நிலையில் அதைத் தானே இறங்கி சுத்தம் செய்தவர் கலைஞர். மேலும் மெரினா கடற்கரை செல்லும் சாலைக்கு காமராசர் சாலை என்று பெயரிட்டவர் கலைஞர். பள்ளிக்கூடங்கள், நூலகங்கள் என ஏராளமான திட்டங்களுக்கு பெருந்தலைவர் காமராசர் பெயரையே சூட்டி அழகு பார்த்தவர் கலைஞர்.

## தொழில் முனைவோராக 3 இலட்சம் கிராமப் பெண்கள்; திமுகவின் தேர்தல் அறிக்கை!

50 துறைகளில் 5 ஆண்டுகளில் செய்து முடித்த சாதனைகளையும்; அதே துறைகளில் தொடரப் போகும் ஆட்சியில் அதன் தொடர்ச்சியாக திட்டமிட்டுள்ள செயல் திட்டங்களையும் விரிவாக விளக்குகிறது தேர்தல் அறிக்கை. குறிப்பாக மகளிர் நலன் எனும் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய செய்திகளை நாம் குறிப்பிட்டாக வேண்டும். மகளிர் உரிமைக்கான திட்டங்களை இலவசம் என்றும் பிச்சை என்றும் சில பேர் வழிகள் மேடைகளில் பேசி வருகிறார்கள்.

குறிப்பாக இல்லத்தரசிகளுக்கான ரூ.8,000 கூப்பன் திட்டத்தை ஊழல் திட்டமாக எடப்பாடி மலினப்படுத்தி வருகிறார். குளிர்சாதன பெட்டிகளை அரசே கொள்முதல் செய்து மக்களுக்கு வழங்கும் அவரது திட்டம் தான் ஊழலுக்கு வழி வகுக்கக் கூடிய ஒரு திட்டம். மாறாக இல்லத்தரசி திட்டம் 8000 ரூபாய்களுக்கான கூப்பன் மட்டும் வழங்குவதோடு அரசு கடமை முடிந்து விடுகிறது ; எந்தப் பொருளை வாங்குவது ; எந்தக் கடையில் வாங்குவது என்ற முழுமையான விருப்பஉரிமை பெண்களுக்கே வழங்கப்படுகிறது. இதில் பயனடைவது பெண்கள் மட்டுமல்ல; வணிகர்களின் வர்த்தகமும்தான்.




இதைத் தவிர 3,00,00 கிராமப் பெண்களை தொழில் முனைவோராக மாற்றும் மிகச் சிறப்பான திட்டமொன்று இதில் இடம் பெற்று இருக்கிறது. இத்திட்டம் எப்படி செயல்படுத்தப்பட போகிறது என்பதை தேர்தல் அறிக்கை விவரிக்கிறது. 5 லட்சம் ரூபாய் முதலீட்டுடன் தொழில் தொடங்க நிபந்தனை ஏதும் இன்றி வங்கிக் கடன் பெறுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும். நவீன தொழில் உற்பத்தி முறை குறித்து இந்தப் பெண்களுக்கு முதலில் பயிற்சி அளிக்கப்படும். பிறகு அரசே நவீன உற்பத்திக் கருவிகளை கொள்முதல் செய்து ஒரு பொது நல மையத்தில் வைக்கும். இந்த பொதுநல மய்யங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப்படும்.

பெண்கள் அரசு தரும் உதவியில் உற்பத்திக்கான மூலப் பொருள்களை வாங்கினால் மட்டும் போதும். எந்திரங்களை வாங்க வேண்டிய அவசியம் இல்லை. மூலப் பொருள்களை மட்டும் பெண்கள் இந்த பொது நல மையத்திற்கு கொண்டு வந்து அங்கே இருக்கும் நவீன கருவிகளை பயன்படுத்தி மூலப்பொருளை உற்பத்தி பொருளாக மாற்றிக் கொள்ளலாம்.

இத்திட்டத்திற்கு அடுத்த 5 ஆண்டுகளில் 2 லட்சம் கோடி அளவிலான வங்கி கடன்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும். இத்துடன் அரசின் கடமை முடிந்து விடவில்லை; அரசு வாங்கும் பொருள்களுக்கு இந்த பெண்களின் உற்பத்திக்கு முன்னுரிமை கொடுத்து கொள்முதல் செய்யப்படும். இவை தவிர மற்றொரு மிக முக்கிய திட்டமும் அடங்கி இருக்கிறது. உயர் கல்வி பெற்ற பெண்கள் தனியார் துறைகளில் உயர் பதவிகளுக்கு வர முடிவதில்லை; அவர்களை அந்த பதவியில் அமர்த்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு இந்த தேர்தல் அறிக்கையில் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தனியார் நிறுவனங்கள் ரூ. 2 லட்சம் அளவில் ஊதியம் தரக்கூடிய உயர் பதவிகளில் படித்த பெண்களை நியமித்தால் அவர்களுக்கு வழங்கப்படும். ஊதியத்தில் 10 விழுக்காடு தொகையை அந்த தனியார் நிறுவனங்களுக்கு அரசே மானியமாக வழங்கும் என்ற அற்புதமான திட்டம் இந்த அறிக்கையில் இடம் பெற்றிருக்கிறது. இப்படி ஒரு திட்டத்தை இந்த திராவிட மாடல் ஆட்சியைத் தவிர வேறு எந்த மாநிலத்திலாவது கற்பனை செய்தாவது பார்க்க முடியுமா? அடுத்த 5 ஆண்டுகளில் நான்கு சக்கர வாகனம் மற்றும் பேருந்து ஓட்டுநர்களுக்கான பயிற்சிகள் வழங்கி அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்தும் திட்டமும்; பெண்கள் ஷேர் ஆட்டோ வாங்குவதற்கு மானியத்துடன் வங்கி கடன் பெற்று தரும் திட்டமும் இடம்பெற்றுள்ளன.

இலவசங்களை வழங்கி மக்களை பிச்சைக்காரர்களாக ஆக்குகிறது என்று நாக்கில் நரம்பின்றி இழிவு பிரச்சாரம் செய்யும் பேர்வழிகள் தமிழ்நாடு அரசின் இந்த திட்டங்களுக்கு என்ன பதிலை கூறப் போகிறார்கள்? மக்களிடம் கருத்துகளை பரப்புவதற்கும் மேடைகளில் பேசுவதற்கும் இந்த தேர்தல் அறிக்கையை முழுமையாக படித்தாலே போதும். தரவுகளும் தகவல்களும் செயல் திட்டங்களும் குவிந்து கிடக்கும் அற்புதமான ஆவணம் திமுகவின் தேர்தல் அறிக்கை!

## பாஜகவின் ஊழல் ஒழிப்பு நாடகம்

### ஊழல் ஊழல் என்று கூப்பாடு போடும் பாஜக ஊழல் ஒழிப்பு உத்தமர்களின் ஊழல் பட்டியல் இதோ:

★ ஜார்கண்ட் மாநில நிலக்கரி ஊழலில் வாஜ்பாய் அமைச்சரவையில் இணை அமைச்சராக இருந்த திலீப் ராய் 3 ஆண்டுகள் சிறை தண்டனை.

★ கர்நாடகத்தில் டெண்டர் முறைகேட்டில் கர்நாடக பாஜக அமைச்சர் நேரு கெலோகர் 2 ஆண்டுகள் சிறை.

★ 2013 வியாபம் ஊழலில் உச்ச நீதிமன்றம் சி.பி.அய் விசாரணைக்கு உத்தரவிட்டது. ம.பி பாஜக அமைச்சர் லஷ்மிகாந்த் சர்மா 18 மாதம் சிறை.

★ 1 கோடி 37 லட்சம் ரூபாய் ஊழல் வழக்கில் மிசோரம் பாஜக எம்.எல்.ஏ புத்த தன்சக்மா உட்பட 12 பாஜகவினருக்கு 1 ஆண்டு சிறை.

★ 2001-ல் பாதுகாப்புத்துறை தளவாடங்கள் வாங்கும் ஊழலில் பாஜக தலைவர் பங்காரு லஷ்மணனுக்கு 7 ஆண்டு சிறை.

★ பெங்களூர் மெகா சிட்டி ஊழலில் கர்நாடக பாஜக அமைச்சர் யோகேஸ்வரர் மீதான ஊழல் வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.




★ ஒரு கோடி ரூபாய் மீன்வள ஒப்பந்த மோசடி வழக்கில் மோடி அமைச்சரவையில் அமைச்சராக இருந்த குஜராத் அமைச்சர்கள் பர்ஷோத்தம்பாய் ஓதவ்ஜிபாய் சோலங்கி, திலீப் சங்கனி ஆகியோர்மீது நடவடிக்கை எடுக்க குஜராத் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

★ 103 கோடி வங்கி மோசடி வழக்கில் மகாராஷ்டிரா பாஜக தலைவர் மோஹித் கம்போஜ் மீது சிபிஅய் விசாரணை நடைபெற்று வருகிறது.

★ 40 லட்சம் லஞ்சம் வழக்கில் கர்நாடக பாஜக எம்.எல்.ஏ குருபரக்ஷாவுக்கு சிறை.

★ 18 கோடி சட்ட விரோத பண பரிவர்த்தனை வழக்கில் ஜனார்த்தன ரெட்டி சிறை.

★ பணி நியமன மோசடி வழக்கில் வங்காளத்தை சேர்ந்த யுவ மோர்ஷா (இளைஞரணி) மற்றும் உள்ளூர் தலைவர் சௌரவ் சவுத்ரிக்கு சிறை

★ அஸ்ஸாம் காவல்துறை தேர்வு ஊழல் வழக்கில் பாஜக தலைவர் தீபன்தேகாவுக்கு சிறை

★ மேற்கு வங்காளத்தில் கேஸ் டீலர் ஊழல் வழக்கில் பாஜக தலைவர் ரஞ்சித் பஜுநுதாருக்கு சிறை.

★ தமிழ்நாட்டில் 2438 கோடி ஆருத்ரா நிதி மோசடி வழக்கில் பாஜக உறுப்பினர்கள் ஹரிஷ் மற்றும் ஆர்.கேசுரேஷ் ஆகியோர் வழக்கு விசாரணையில் உள்ளனர்.

★ 5000 கோடி நியோ மேக்ஸ் நிதி மோசடி வழக்கில் மதுரை பாஜக உறுப்பினர் வீரசக்தி கைது செய்யப்பட்டுள்ளார்.

★ விக்ராந்த் போர்க்கப்பல் மீது 57 கோடி ஊழலில் மகாராஷ்டிரா பாஜக தலைவர் கிரி சோமையா கைது.

★ கர்நாடக காவல்துறை தேர்வு ஊழல் வழக்கில் பாஜக எம்.எல்.ஏ திவ்யா சிறை

★ பண மோசடியில் கர்நாடக பாஜக எம்.எல்.ஏ குமரசாமிக்கு 4 ஆண்டுகள் சிறை.

★ பீகாரில் சுதாபுரி மாவட்டத்தில் கலவரத்தை தூண்டியதாக பாஜக எம். எல்.ஏ ராம் நரேஷ் யாதவ் 10 ஆண்டு சிறை. இந்தக் கலவரத்தில் 5 பேர் இறந்தது குறிப்பிடத்தக்கது.

★ உ.பி உனாவ் சிறுமி வன்கொடுமை மற்றும் தந்தை கொலை வழக்கில் பாஜக எம்.எல்.ஏ குல்தீப் சிங் 10 ஆண்டு சிறை.

★ சிறுமி பாலியல் வழக்கில் உத்தரப்பிரதேச பாஜக எம்.எல்.ஏ ராம் துலேவுக்கு 25 ஆண்டுகள் சிறை.

★ கிரிமினல் வழக்கில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ராம் சங்கர் கட்டாரியா 2 ஆண்டுகள் சிறை.

★ பல்வேறு ஊழல் மோசடி வழக்கில் சிக்கி உள்ள கர்நாடக பாஜக தலைவர் எடியூரப்பா தற்போது பிணையில் உள்ளார்.

★ சி.ஏ.ஜி அறிக்கை மோடி ஆட்சியில் பல லட்சம் கோடி ஊழல் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளது.

இப்படி ஊழல் ஒருபுறம், கிரிமினல் வழக்குகள் ஒருபுறம், நாட்டின் பாதுகாப்பு ரகசியங்களை விற்பனை செய்வது, நாட்டின் இயற்கை வளங்களை தனியாருக்கு தாரைவார்ப்பது என்று இந்தியாவை சிதைத்துக் கொண்டிருக்கிறது மோடி அரசு. இதையெல்லாம் மறைப்பதற்கு மதவாத அரசியலை பயன்படுத்துகிறார்கள்.

– மனோ தங்கராஜ் (தி.மு.க)

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# ஈரோடு, கடலூர், ஏற்காட்டில் தெருமுனைக் கூட்டங்கள்!

**ஈரோடு:** தெற்கு மாவட்டக் கழகம் சார்பாக தொடரட்டும் "தமிழ்நாட்டில் சாதனைகள், திமுக ஆட்சியை உறுதி செய்வோம்" என்கின்ற முழக்கத்தோடு அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி ஒருங்கிணைப்பில் 4 நாட்களில் 13 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. தெருமுனைக் கூட்டம் மாவட்டத் தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.



**11.03.26** புதன் அன்று காலை சூரம்பட்டி நால்ரோடு பகுதியில் தெருமுனைக் கூட்ட மாவட்டத் தலைவர் செல்வராஜ் தலைமையில் மாலை 5 மணி அளவில் நடைபெற்றது. அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி, சண்முகப்பிரியன் (திமுக) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**2வது நாள் (12.03.26):** வியாழன் அன்று கனி ராவுத்தர் குளம், அக்ரகாரம், காமராஜர் நகர், காந்திநகர் ஆகிய 4 இடங்களில் நடைபெற்றது. இக்கூட்டங்களுக்கு மாவட்ட தலைவர் செல்வராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டங்களில் அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, கழகப் பொருளாளர் துரைசாமி, சமூக வலைதள பொறுப்பாளர் பரிமளராசன், திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து ஆகியோர் உரையாற்றினார்கள்.மதிய உணவு சண்முகப்ரியன் (திமுக) வழங்கினார்.

**3வது நாள் 13.03.25:** வெள்ளி காலை சோலார் பகுதியில் தெருமுனை கூட்டங்கள் தொடங்கி லக்காபுரம், நஞ்சை ஊத்துக்குளி, மொடக்குறிச்சி ஆகிய 4 இடங்களில் நடைபெற்றது. கூட்டங்களில் அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி கழகப் பொருளாளர் துரைசாமி சமூக வலைதள பொறுப்பாளர் பரிமள ராசன், திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து ஆகியோர் உரையாற்றினார்கள்.

**4வது நாள் 15.03.26** ஞாயிறு அன்று காலை ஏலமாத்தூர் பகுதியில் தொடங்கி மண்கரடு, விளக்கேற்றி, சிவகிரி ஆகிய 4 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டங்களில் அமைப்பு செயலாளர் ரத்தினசாமி, சிவகிரி சண்முகம் (தி.க) ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். பழனிச்சாமி, மீசை முருகேசன், திருமுருகன், விச்சு கணேசன், சத்யராஜ் சந்தோஷ், அய்யப்பன், பாபு, கிருஷ்ணமூர்த்தி, மரவபாளையம் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஏற்காடு:** 08.03.2026 அன்று ஏற்காடு பகுதியில் மூன்று இடங்களில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. ஏற்காடு டவுன், ஒண்டிக்கடை, மஞ்சக்குட்டை பகுதியில் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றது. ஏற்காடு ஒன்றிய செயலாளர் இரா. கார்த்திகேயன் தலைமை வகித்தார். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் க. சரிதா முன்னிலை வகித்தார்.



தெருமுனைக் கூட்டத்தின் நோக்கம் குறித்து மக்களிடம் சேலம் மாவட்ட அமைப்பாளர் அ. பெருமாள், கோனூர் வைரமணி (திமுக தலைமைக் கழகப் பேச்சாளர், சேலம் மேற்கு மாவட்ட இலக்கிய அணித் தலைவர்), தி.மு.க ஒன்றிய செயலாளர் ராஜா, மாவட்ட இளைஞரணித் தலைவர் ம. தேவபிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

ஏற்காடு பகுதி மக்கள் மட்டுமல்லாமல் ஏற்காடு சுற்றுலா பயணிகளும் பெருந்திரளாக நின்று கேட்டுச் சென்றனர். சுற்றுலா வந்த விசிகவை சேர்ந்த மகளிரணி தோழர்கள் கூட்டத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு குடிநீர் வாங்கி கொடுத்து வாழ்த்தினார்கள்.

தெருமுனைக் கூட்டத்தை பொதுக்கூட்டத்தைப்போல த சுகந்தா ராமசந்திரன் (மஞ்சக்குட்டை பகுதியில் பஞ்சாயத்து தலைவர்), ராமசந்திரன் (திமுக மஞ்சக்குட்டை கிளைக்கழக செயலாளர்) நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தனர்.

கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), தங்கதுரை (சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), தேவராஜ் (மாநகர அமைப்பாளர்), நாகராஜ் (மாணவரணி அமைப்பாளர்), உமாசங்கர் (வனவாசி நகர செயலாளர்), மோகன்ராஜ் (இளம்பிள்ளை நகரச்செயலாளர்) கவியரசு(மாணவரணி அமைப்பாளர்), மூலப்பரை கோகுல், பொட்டனேரி ரவிக்குமார், இளம்பிள்ளை வெண்ணிலா, ஏற்காடு சுதாகர், ஏற்காடு டேவிட், ஏற்காடு நான்சி , ஏற்காடு கார்க்கி, பெரியார் பிஞ்சுகள் சே , அமுதன் . மற்றும் மஞ்சக்குட்டை மாதேஷ் திமுக, K.v.ராஜா (எ)ராஜேந்திரன் (ஏற்காடு ஒன்றிய கழக செயலாளர்), கருணாநிதி(முன்னாள் மாவட்ட கவுன்சிலர்), ராமச்சந்திரன் (மஞ்சகுட்டை தேர்தல் பொறுப்பாளர்), மைக்கேல் (கிளை கழகச் செயலாளர்), ஆதிசங்கர் (ஏற்காடு சட்டமன்ற தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்), டவுன் பாகம் முகவர் வெங்கடேஷ், விஜய் (பொறியாளர் ஒன்றிய துணை அமைப்பாளர்), கோவிந்தன் (அமைப்புசாரா ஓட்டுனர் அணி ஒன்றிய அமைப்பாளர்), அனீஸ் (மஞ்சகுட்டை கிளைசெயலாளர்) மற்றும் ராமச்சந்திரன் (தேர்தல் பொறுப்பாளர்), சுகந்தா இராமச்சந்திரன் (மஞ்சக்குட்டை பஞ்சாயத்து தலைவர்), சம்பத் (மஞ்சக்குட்டை முன்னாள் பஞ்சாயத்து தலைவர்)மஞ்சக்குட்டை ஊர்கவுண்டர் பழனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கடலூரில் கழகத் தலைவர் பேச்சு
## பாஜகவை தமிழ்நாட்டில் காலூன்ற விடக்கூடாது

**கடலூர்:** மாவட்டக் கழகத்தின் சார்பில் 28.03.2026 சனிக்கிழமை அன்று மாலை 6 மணியளவில் கடலூர் மஞ்சகுப்பம் பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலை அருகில் கடலூர் பெரியார் சிவா தலைமையில் பொதுகூட்டம் நடைப்பெற்றது.

கடலூர் ராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். அறிவழகன் முன்னிலை வகித்தார். பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தலைவர் "தகைசால் தமிழர்" தோழர் நல்லகண்ணு மற்றும் திராவிட இயக்கத் தலைவரும், சமூக சீர்திருத்தவாதியுமான அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி ஆகியோரின் படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தி. மு. க தேர்தல் பணிக்குழு செயலாளர் வழக்கறிஞர் இள. புகழேந்தி அவர்களும் படத்தை திறந்து வைத்து வீரவணக்கம் செலுத்தினர். உமாபதி, லதா, சத்யா, திராவிட மகிழன் கலைக்குழு ஆகியோரின் அரசியல் நையாண்டி மற்றும் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

லோகு. அய்யப்பன் (திராவிடர் விடுதலைக் கழக புதுச்சேரி மாநில தலைவர்), இரா. உமாபதி (தலைமைக் குழு உறுப்பினர்), கே. எஸ். ராஜா (தி. மு. க கடலூர் மாநகர கழக செயலாளர்) , து. பாலு (மக்கள் அதிகாரம், செயற்குழு உறுப்பினர்), தே. கலை மோகன் (வி. சி. க கடலூர் சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளர்), புதுவை தீனா (பெரியார் சிந்தனையாளர் இயக்க ஒருங்கிணைப்பாளர்), எழிலேந்தி (தி. க கடலூர் மாவட்ட செயலாளர்), மு. பெரியாண்டவர் (வி. சி. க தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் பணியாளர் பேரவை மாநில பொதுச்செயலாளர்) ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.



(முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தி. மு. க தேர்தல் பணிக்குழு செயலாளர் வழக்கறிஞர் இள. புகழேந்தி), (தி. மு. க புதுச்சேரி மாநில மகளிர் அணி அமைப்பாளர் தி. மு. க காயத்ரி ஸ்ரீகாந்த்), (வி. சி. க மாநில அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் தி. ச. திருமார்பன்), தே. கலை மோகன் (வி. சி. க கடலூர் சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளர் ) ஆகியோர் கருத்துரையாற்றினர்.




நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில் ஜாதிவெறி, வர்ணவெறி பேசுகிற- நமக்கு எதிரானதை, நம்மை இழிவுப்படுத்துவதை நம்மிடம் புகுத்துவதுதான் தன் கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிற 'பா.ஜ.க' அரசு இங்கு வந்துவிடக்கூடாது. அவர்கள் ஆட்சி அதிகாரம் பெற்று விடக்கூடாது; மீண்டும் தமிழ்நாட்டில் "தி.மு.க" அரசு தொடர வேண்டும் என கோரிக்கையாக முன் வைத்து சிறப்புரையாற்றினார்.

கடலூர் மாவட்ட பொறுப்பாளர் சதீஷ் நன்றியுரையாற்றினார். (தி. மு. க தலைமைக் குழு உறுப்பினர் விக்ரமன்), (தி. மு. க மாநகர துணை செயலாளர் அகஸ்டின் பிரபாகரன்), (எஸ். டி. பி. அய் கட்சி கடலூர் நகரத் தலைவர் வஜ்ரத்துல்லா), (புதுச்சேரி தலித் மக்கள் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் பிரகாஷ்), (வி. சி. க கடலூர் ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர் கமல்), (மக்கள் பாடகர் சேரி குயில் சேட்டு), (புரட்சிகர மாணவர் கூட்டமைப்பு மாவட்ட செயலாளர் தோழர் புஷ்பராஜ்), (கடலூர் மாவட்ட கழகத் தோழர்கள் அரசு, திருமூர்த்தி, சுகுமார, கடலூர், சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் அருண் (இளைஞரணி மாவட்ட அமைப்பாளர்), குமார், அசோக், வீரா மற்றும் வி.சி.க, எஸ்.டி.பி.அய், புதுச்சேரி தி.வி.க மற்றும் கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

## மேட்டூர் கிட்டு தந்தை காளியப்பன் இயற்கை எந்தினார்!

தோழர் மேட்டூர் கிட்டு அவர்களின் தந்தையார் காளியப்பன் 28.03.2026 அன்று இயற்கை எய்தினார். அவருடைய மறைவிற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி 30.03.2026 மேட்டூர் பாரதி நகரில் உள்ள இல்லத்திற்கு சென்று இரங்கல் தெரிவித்தார்.



கழகப் பொருளாளர் துரைசாமி, கழக மாநில அமைப்புச்செயலாளர் ப. இரத்தினசாமி, கோவை மாவட்ட தலைவர் பன்னீர்செல்வம், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் சுதா, கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயக்குமார், திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து, திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் ஐயப்பன், முத்துராஜ், ராஜா, அவினாசி ஆகியோர் கலந்துகொண்டு இரங்கல் தெரிவித்தனர்.

## கழக ஏட்டுக்கு வளர்ச்சிநிதி

ஆசிரியர்கள் சிவகாமி, சிவக்குமார் முன்னெடுப்பில் பெரியார் முழக்க வளர்ச்சிக்குழு உறுப்பினர்கள் ரூ.13, 500 வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளனர்.

- ஆத்தூர் தோழர் கணபதி 17 பெரியார் முழக்கத்துக்கான ஆண்டு சந்தா ரூ.5,100 வழங்கியுள்ளார்.
- தோழர் துரைராசு ரூ.3000 பெரியார் முழக்க சந்தா வழங்கியுள்ளார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : April 09, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran